மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களுக்கு எல்லாம் ஒவ்வொரு முக்கிய பேருந்துகளுக்கு பெயர் வைத்திருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டிலே முதல் தேசியத் தலைவர் என்று பெயர் பெற்றும், இராஜாஜி பெயர் எதற்கோ அனைத்து அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டே வருகிறது. ஆகவே, மூதறிஞர் இராஜாஜியின் பெயரால் ஒரு பேருந்துக் கழகம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அரசும் இதுபோல உருவாக்காமல் இல்லை. நம்முடைய சட்டமன்ற வளாகத்திற்குள்ளே இராஜாஜி படம் வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்..(குறுக்கீடு) இல்லை.. இல்லை.. நீங்கள் சொல்வதுபோல் இருக்கிறது. இராஜாஜி மருத்துவமனை என்று இருக்கிறது. பல்வேறு இடங்களிலே அவர் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களைப் பிரிக்கின்ற போது எந்தத் தலைவருடைய பெயரை வைத்தால் அது பொருத்தமாக இருக்கும் என்று பின்னாலே பரிசீலிக்கப்படுமே தவிர இன்றைக்கு அதுபற்றி உங்களுக்குக் கூறுவதற்கு சாத்தியக்கூறுகள் இப்போழுது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 207, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

207—

ஆசியா வளர்ச்சி வங்கி மூலம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நிதி உதவி வழங்கல்

*9039—திரு. ம. சின்னசாமி:

மாண்புமிகு பொது ப்பணித் துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசியா வளர்ச்சி வங்கி (Asian Development Bank) தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நிதி உதவி வழங்கியுள்ளதா?

(ஆ) இலவச மின்சாரம் வழங்குவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஆசியா வளர்ச்சி வங்கி மாநில அரசைக் கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1993 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி எவ்வளவு நிதியுதவி செய்கிறது? எந்த நிபந்தனை யின்பேரில் நிதியுதவி அளிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஆசிய வளர்ச்சி வங்கி ஒவ் வொன்றும் 210 மெகவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவினை வட சென்னை அனல்மின் நிலையத்தில் அமைக்க ஒரு கடனும், வட சென்னை அனல் மின் நிலையத்தில் மேலும் ஒரு 210 மெகாவாட் திறன் கொண்ட 3-வது பிரிவை அமைக்கவும் சென்னை மின்னணு பகிர்மானம்-டிஸ் ட்ரிபியூசன் மற்றும் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் திட்டம் மற்றும் அப்கிரேடேசன் ப்ராஜெக்ட் என்று சொல்லப்படுகின்ற திட்டத்திற்கும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் தேவைப்படும் நிலக்கரியை கையாளும் இயந் திரம்--கோல் ஹேண்டிலிங் சிஸ்டம் என்று சொல்லப்படு கின்ற அந்தத் திட்டத்திற்கும், இப்படி இந்தத் திட்டங் களுக்கு இரண்டு கடன்களை வழங்கியிருக்கிறது. முதல் கடன் 255.39 கோடி. இரண்டாவது கடன் 326.07 கோடி. ஆக, இந்த இரண்டு கடன்களும் ஆசியன் வளர்ச்சி வங்கி நமக்கு வழங்கியிருக்கிறது.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்காக ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி வழங்குகின்ற கட்டத்தில் இலவச மின் சாரம் வழங்குவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அந்த வங்கிகளுடைய அதிகாரிகள் மாநில அரசை கேட்டுக்கொண்டதாக ஒரு செய்தியைப் படித்தேன். அந்தச் செய்தி உண்மைதானா? அப்படி இல்லையானால், இலவச மின்சாரத்திற்காக ரூபாய் 800 கோடி அளவிற்கு மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகிறதே, அது எப்படி சரிக் கட்டப்படுகிறது. என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் வழங்குவதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஆசிய வளர்ச்சி வங்கி எந்தவித நிபந்தனையையும் விதிக்கவில்லை. ஆனால் 179 என்கின்ற கடன் ஒப்பந்தத்தில் 3-வது அட்டவணையில் 12வது வரைவின்படி தமிழ்நாடு அரசு வருடத்திற்கு இரு முறை காலதாமதம் இன்றி ஒன்று, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வர வேண்டிய விவசாயத்திற்குப் பயன்படும் மின்சாரக் கட்டணத் தொகை மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் அதேமாதிரி பயனீட்டாளர்களுக்கு மின்சாரத்தை அடக்கவிலைக்கும் குறைவாக விற்பதால் விழும் துண்டுத் தொகை முழுவதும் ஈடு செய்ய வேண்டுமென்ற நிபந்தனை. இந்த நிபந்தனைகளைத்தான் நம்முடைய ஆசிய வளர்ச்சி வங்கி விதித்திருக்கிறது. இலவச மின்சாரம் வழங்குவதை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று எந்தவிதமான நிபந்தனையும் விதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிய வளர்ச்சி வங்கி அப்படி கேட்டுக் கொள்ளாவிட்டாலும், நாட்டினுடைய நிலை கருதியும், நிதி நிலைமை கருதியும் இப்படி இலவச மின்சாரம் வழங்கும்போது விவசாயிகளை தரம் பிரித்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் வழங்குகின்ற பிரச்சினைக்கும், இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆகவே இதுபற்றித் தனியாகக் கேள்வி போடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 208, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

208—

கோமுகி நதியின் தண்ணீரைப் பாசன நிலங்களுக்கு விடுதல்.

*9158—திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோமுகி நதியின் தண்ணீரை, அந்த நதி பாசனம் செய்யும் நிலங்களுக்கு விடாமல் சம்பந்தமில்லாத நிலங்களுக்கு விடப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாசனம் செய்யும் நிலங்களுக்கு தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா?